# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC .74/2016** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.2 தங்கப்பாண்டி** |
| **Father Name** | : | **செல்வம்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2021

மு.வி:

நான் டி.கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது சின்னம்மாள். கடந்த 2016ம் ஆண்டு சம்பவத்தினத்தன்று சம்பவம் நடந்த 1/4 மணிநேரத்தில் மாலை 5-1/4 மணிஅளவில் எனது இறந்துபோன சித்தப்பா கருப்பயையாவின் மொபைலில் இருந்து எனக்கு கிடைத்ததகவலின் பேரில் நான் அயோத்திபட்டியில் இருந்து உசிலம்பட்டியை நோக்கி வந்தபோது மீண்டும் எனக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்து அதன்பேரில் நான் ஆண்டிபட்டியை நோக்கி சம்பவம் நடந்த செட்டியபட்டிக்கு விரைந்து சென்றேன். சம்பவயிடத்தில் கூட்டமாக இருந்தது. நான் எனது இருசக்கரவாகனத்தில் இருந்து இறங்கிபோய் பார்த்தேன். எனது சித்தப்பா கருப்பையாவின் வண்டி டிவிஎஸ் ஸ்போர்ட் வண்டி சம்பவயிடத்திலிருந்து சற்று தள்ளி விழுந்துகிடந்தது. எனது சித்தப்பாவை தூக்கி பார்த்தபோது அவருக்கு கை முறிந்தநிலையில் உடம்பு முழுவதும் காயங்கள்இருந்தது. எனது சித்தப்பா தெப்பம்பட்டிக்கு இருசக்கரவாகனத்தில் சென்றுவிட்டு வரும்வழியில் செட்டியப்பட்டி தென்னந்தோப்பு அருகே அவருக்கு

எதிரே வந்த சிவப்பு கலா் காா் மோதி விபத்து ஏற்பட்டுருந்தது. காா் சம்பவயிடத்தில் நின்றதை பாா்த்தேன். காா் ஓட்டுநரை பாா்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். அவருக்கும் காயங்கள் ஏற்பட்டுருந்தது. நான் ஊருக்குள்ளே தகவல்கொடுத்தேன். போலீசாா் சம்பவயிடத்திற்கு வந்தாா்கள். சம்பவயிடத்திலியே கருப்பையா இறந்துவிட்டாா். ஆம்பலன்சில் கருப்பையாஉடல் எடுத்துசெல்லப்பட்டது. போலீசாா் என்னை விசாரணை செய்தாா்கள். எனக்கு காட்டப்படும் புகாா் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அசாஆ2**.

கு.வி.

நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் போலீசாா் விசாரணையில் சொல்லியுள்ளிா்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் முடிந்தபின்புதான் நீங்கள் சென்றதாக உங்களுக்குசம்பவம் பற்றி நேரிடையாக தெரியாது என்று சொன்னால் சரிதான். கருப்பையா இருசக்கரவாகனத்தை ஓட்டி செல்லும்போது ஒரு பாட்டி சாலைஓரத்தில புளியபழம் எடுத்து கொண்டுருந்தாா் அவா் மேல் மோதுவது தவிா்க்க கருப்பயைா வாகனத்தை தெற்கு திசையை நோக்கிதிருப்பியதால் அந்தவிபத்து நோ்ந்தது என்றால் சரியல்ல. எதிரி திசையில் வந்த காா் தான் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் போய் மோதிவிட்டதாக கேள்விப்பட்டேன். காா்தான் பாட்டிமீது மோதுவதை தவிா்ப்பதற்க்காக வடக்கே போய்விட்டது என்று சொன்னால் சரிதான். எதிரியை நேரடியாக இதுவரைபாா்க்கவில்லை என்றுசொன்னால் சரிதான். உங்கள் சித்தப்பா இருசக்கரனத்தின் எண்ணும் எதிரியின் வாகனஎண்ணும் தெரியாதுஎன்று சொன்னால் சரிதான். உங்களுடைய முகவரி கல்லுப்பட்டி என்றுசொன்னால் சரிதான் எனது அப்பா பிறந்த ஊா் அயோத்திப்பட்டி தற்போது கல்லுப்பட்டியில்வசித்து வருகிறேன். நீங்கள் கேள்விபட்டதாகசொன்னது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் இறந்த கருப்பையா உங்கள் சித்தப்பா என்பதால் அசா1னின் உங்கள்

சித்திக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை. /Sd./Thangapandi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.